அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருந்தார்கள். இது அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

45—

பாலம்

*__1602—திரு. கே.பி. கந்தன்:__

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, கொட்டிவாக்கம் முதல் சோழிங்கநல்லூர் கெனால் பகுதி வரையுள்ள குறுகிய பாலத்தினை அகலப்படுத்தி, புதிய பாலம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, கொட்டிவாக்கம் முதல் சோழிங்கநல்லூர் கெனால் பகுதி வரை உள்ள குறுகிய பாலத்தினை அகலப்படுத்தி, புதிய பாலம் கட்டித் தர மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசால் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.*

திரு. கே.பி. கந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணத் தொண்டனாக இருந்த என்னை சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினராக ஆளாக்கி, அழகு பார்த்த கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது*

2011 ஆகஸ்ட் 19]

பணிவான வணக்கத்தையும் நன்றியையும் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெறச் செய்த மக்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கொட்டிவாக்கம் முதல் ஒக்கியம் துரைப்பாக்கம் வரை பக்கிங்ஹாம் கால்வாயில் ஆறு இடங்களில் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் மொத்த மதிப்பு 3 கோடியே 30 இலட்சம் ரூபாயாகும். இந்தப் பணி நடைபெற்று வருவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திற்கு அறிமுகப்படுத்திய கேப்டன் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தருமபுரியில் பள்ளி நேரங்களில் Railway Gate–ஐ கடக்கவேண்டியுள்ளதால் பள்ளிக் குழந்தைகளும், ஆசிரியர்களும் பெரிய அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, தருமபுரியில் வெண்ணாம்பட்டியில் உள்ள Railway Gate மேம்பாலமும், குமரசாம்பேட்டையிலுள்ள Railway Gate–ல் உள்ள மேம்பாலமும் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக்கிய இதய தெய்வம், எங்கள் குலதெய்வம், அம்மா அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து, பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். மதுராந்தகம் தொகுதியில், மதுராந்தகம் வட்டம், கருங்குழி நகரத்திலிருந்து கத்திரிச்சேரி, உழுதமங்கலம் செல்லும் மக்கள் மழைக் காலங்களில் சுமார் 2 மாதங்கள் அங்குள்ள நகரத்திற்கு வர வேண்டுமென்றால் இடுப்பளவுத் தண்ணீரில்தான் வரவேண்டும். அப்பகுதியில் படிக்கும் மாணவ, மாணவிகள் நலனைக் கருதி . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் மைக்கிலிருந்து சற்று* distance *வைத்துப் பேசுங்கள்.* Half an inch distance *வைத்துப் பேசுங்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *தரைப்பாலத்தை மேம்பாலமாக அமைத்துத் தர புரட்சித் தலைவியின் அரசு . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் மைக்கை* half an inch distance *வைத்துப் பேசுங்கள்*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மேம்பாலமாக அமைத்துத் தரப்படுமா என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2006 அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில், பெரியகுளம் தொகுதியில் வைகையாற்றின் அருகில் இருக்கக்கூடிய முதலக்கம்பட்டியிலிருந்து பக்கத்தில் இருக்கக்கூடிய*

2011 ஆகஸ்ட் 19]

ஆண்டிப்பட்டிக்குச் செல்ல ஒரு பாலம் கட்ட முன்மொழிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், பின்பு அந்தப் பணி நடைபெறவில்லை. நான் இப்பொழுது அங்கே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டதற்குப் பின்பு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளேன். அந்தப் பாலம் கட்டித் தருகிற ஏற்பாடு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாக வினா எழுப்பினால் பதிலளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்தில், மிகவும் நெரிசலான வியாபாரப் பகுதியில், நெடுஞ்சாலையில் மிகவும் நெரிசலான* traffic *இருக்கிறது. ஆகையால், நெடுஞ்சாலையை அந்த இடத்தில் விரிவுபடுத்துவது மட்டுமல்லாமல், அங்கு ஒரு மேம்பாலம் அமைத்துத் தர வாய்ப்பு இருக்கிறதா என்று பரிசீலிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நெடுஞ்சாலைத் துறைக்கு வருவதால் உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*